
நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)



காவடியைத் தோளேந்தக் களிந்துருகும் **நகரத்தார்**
பாவடிக்கும் **குரலுக்குப்** பழனியப்பன் காப்பாமே.

ஏப்ரல் 1982

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

குரல் 1

ஒலி 3

துன்மதி

பங்குனி

ஏப்ரல்

1982

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியா னைசகோ தரனே.

— அருணகிரிநாதர்

கௌரவ ஆசிரியர்:
லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625001.
தொலைபேசி ; p. p. 26668

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

உ



தமிழ் செய்த தவம்

சொ. சொ. மீ. சுந்தரம் எம். காம்.,

ஆயிரம் கோடியாய் அடியார்கள் நிற்கநீ
ஆண்டியாய் வந்ததென்ன?
அரும்பான சேவடி இரும்பான மலையிலே
ஆடநீ நின்றதென்ன?
கோயிலொடு கோபுரம் கட்டவே தனவணிகர்
கூட்டமாய் நின்றபோதும்
கோவணம் கட்டியே நிற்கநீ யார்மீது
கோபமுற் றாய்அப்பனே!
தாயிடம் தவறிலை; தந்தையின் பிழைஇலை;
தமிழ்செய்த தவத்தினாலே
தண்டா யுதத்தொடும் கொண்டாட வந்தனை
தத்துவம் தாண்டிநின்றாய்
மாயனார் மருகனே! பிறவிகள் மாயநின்
மலரடிப் பேறுதந்தாய்
மங்கலம் காக்கவே தங்கரத மேறிவரும்
வளர்பழனி மலையாண்டியே.

வழிகாட்டுவார்களா ?

நகரத்தார்களுக்குத் திருமணம், இன்று சமுதாயப் பிரசினை. ஏறக்குறைய ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு பெண்கள் திருமணத்திற்கு வழியில்லாமல் அவலம் உறும் நிலையில். இதைத் தனிப்பட்டவர்களின் பொருளாதாரப் பிரசினை எனச் சொல்ல முடியாது. பழக்க வழக்கங்களைத் தங்கள் பேராசைக்குக் கருவியாய்ப் பயன்படுத்திக்கொள்ளும் போக்கு, இன்று நம்மவர்களில் - ஆண்களிடத்திலும் சரி - பெண்களிடத்திலும் சரி - பெருகிவிட்டது. இதனுல் வாழ்க்கைத் தேவைக்கு ஓரளவு வருவாய் உடையவர்கள் கூட, தம் பெண்களுக்குத் திருமணம் செய்ய முடியாமல் துன்புறுகிறுர்கள். மிகுந்த பணம் கடன் வாங்கினுல் அன்றிக் கலியாணம் நடத்த முடியாது. கடன் தருவாரும் இல்லை. இது இன்றைய பிரசினை. ஒரு சிலருக்கு அல்ல. 60 சதவீதம் பேருக்கு.

இது நம் சமுதாய மக்கள் அறியாதது அல்ல. ஆனுல் அவர்கள் இதை - இதன் விளைவுகளை - உணரவில்லை. விளைவுகள் இப்பொழுதே தொடங்கிவிட்டன. சமூகக் கன்னியர் பலர், மண வாழ்வுக்காக ஏங்கி, ஏங்கி, அது நடக்காத காரணத்தால், சமூக வரன் முறையையும் மீறி வேறு குலத்தார்களுடன், திருமணம் பெற்றும் பெருமலும் வாழத் தொடங்கிவிட்டார்கள். இது நம் சமூகத்திற்கு அவமானம் இல்லையா ?

பெண் திருமணத்திற்கு ஏராளமாகச் செலவாகும் நிலையை உண்டாக்கியது எது? பெண்களின் படிப்பின்மையா? அழகு இன்மையா? பண்பு இன்மையா? இவை ஒன்றுமல்ல. சமுதாயத்தின் பேராசையும், வெற்றுப் பகட்டிற்கும், வறட்டுப் புகழுக்கும் ஆசைப்படும் குணமும்தான் இந்த நிலையை உண்டாக்கிவிட்டன. மாமியார் பணம் கூடுதலாக வாங்குவதற்கும், சாமான் வரிசை, வற்றல், ஊறுகாய், சில்வர், பிளாஸ்டிக் வாளிகளுக்கும் ஆசைப்பட்டு, ஆண்களைப் பெற்ற பெண்கள், பெண்ணைப் பெற்றவர்களைக் கணக்கு வழக்கு இல்லாமல் கேட்பதும், அதற்கு அவர்கள் வீட்டு ஆண்பிள்ளைகள் தலையாட்டுவதும், இன்று நம் சமுதாயத்தைப் பிடித்துள்ள நோயாகும். இந்த


நோய் வேகமாகப் பரவி வருகிறது. பணக்காரர் எப்படியோ சமாளித்துவிடலாம். ஆனால் பெரும்பான்மையோர் நடுத்தர வருவாய் உடையோர். வருவாய்க்கு வழியில்லாதவர்களும் மிகுந்துள்ளனர். இவர்கள் எவ்வாறு தம் பெண்களைக் கரையேற்றுவார்கள்? "எங்களால் கொடுக்கமுடியும்; கொடுக்கிறோம்" என்று செல்வர்கள் சொல்லக்கூடும். ஆனால் இது தனியார் பிரசினை அல்ல. ஒரு சமுதாயத்திற்குள் செல்வர்கள் பின்பற்றும் பழக்க வழக்கங்களையே மற்றவர்களும் பின்பற்ற வேண்டிய நிலை எப்படியோ வந்துவிடுகிறது. அப்படிப் பின்பற்றாவிட்டால் வாழ்க்கை சாத்தியம் இல்லை. ஆதலால் செல்வர்கள் இதைச் சமுதாய பிரசினையாக உணர வேண்டும். மாமியார் பணம் வாங்காமல், சாமான்கள் பரப்பாமல், எளிமையாகத் திருமணம் நடத்தி வழிகாட்ட வேண்டும். ஒவ்வோர் ஊரிலும் ஊர்க் கூட்டம் கூட்டி, இந்தப் பிரசினைகளை எடுத்துக் கூறி, ஊர்க்கட்டு வைத்து, இந்தக் கொடிய பழக்கங்களை நிறுத்த வேண்டும். அப்போதுதான் ஏழை, நடுத்தர மக்கள் பாதுகாப்பு உணர்ச்சியுடன் கொடுக்கல் வாங்கல் இல்லாமல் தம் வீட்டுத் திருமணங்களை நடத்த முடியும். சமுதாயத்தின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் வழி காட்டுவார்களா ?

உங்கள் நூலும், எங்கள் ஆய்வும் பற்றிய ஓர் அறிவிப்பு !

இம்மாத "நகரத்தார் குரல்" இதழிலிருந்து 'உங்கள் நூலும், எங்கள் ஆய்வும்' என்ற ஓர் பகுதி வெளிவருகிறது. புத்தக விமர்சனத்தை விரும்புவோர் 1981 ஆம் ஆண்டிற்குப் பிறகு வெளியிடப்பட்டுள்ள கவிதை, கட்டுரை, நாவல் போன்ற தமிழ் நூல்களின் இரண்டு பிரதிகளைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம் :-

ஆசிரியர்,
"நகரத்தார் குரல்"
25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001.

கவிஞர் கண்ணதாசனின் நினைவு விழா
18-4-82 அன்று மதுரையில் நடைபெறுகிறது



உலகப் புகழ் பெற்ற மகா கவிஞன் 'கவியரசு' கண்ணதாசனின் நினைவு விழா 18-4-82 ஞாயிறன்று மதுரை தல்லாகுளம் ராஜா முத்தையா மன்றத்தில் நடைபெறவிருக்கிறது. இந்த நினைவு நாள் விழாவில் கருத்தரங்கமும் கவியரங்கமும் இடம் பெற்றுள்ளன.

குன்றக்குடி அடிகளார்

கருத்தரங்கம் காலை 9 மணிக்குத் தொடங்குகிறது. இவ்விழாவிற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமை ஏற்க, கவியரசரின் புதல்வர்களான திரு. கண்மணி சுப்பு, திரு. கலைவாணன் ஆகிய இருவரும் முன்னிலை வகிக்கிறார்கள். மதுரை வங்கியின் தலைவர் திரு. இராம. முத்தையா அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்த, மதுரை மாநகராட்சியின் முன்னாள் மேயர் திரு. எஸ். முத்து அவர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

சொற்பொழிவு

திரு. வி. பி. இராமன், டாக்டர் எஸ். சண்முகம் செட்டியார், திருவாளர்கள் மாணிக்கம் முத்தையா, எம். எஸ். ஆர் எம். மெய்யப்பன், பஞ்சு அருணாசலம் (திரைக்கதை, வசனகர்த்தா) எஸ். எஸ். தென்னரசு, வி. என். சிதம்பரம் செட்டியார், ப. நெடுமாறன்-எம்.எல்.ஏ., ப. சிதம்பரம், தா. பாண்டியன், நடிகை மனோரமா ஆகியோர் சொற்பெருக்காற்றுகிறார்கள்.

அமைச்சர் கா. காளிமுத்து

தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு கா. காளிமுத்து அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துகிறார்கள்.

கண்ணதாசன் படத் திறப்பு

கவியரங்கம் மாலை 5 மணிக்குத் தொடங்குகிறது. திரு. எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் கவியரசு கண்ணதாசனின் படத்தைத் திறந்து வைக்கிறார்கள். எழுத்தாளர் திரு. இராம. கண்ணப்பன் அவர்கள் இவ்விழாவில் பாராட்டுப் பெறுகிறார். மதுரை மாநகராட்சியின் துணைமேயர் திரு. சோ. நவநீதகிருஷ்ணன், திரு. அ. சங்கரலிங்கம் ஆகிய இருவரும் பாராட்டுரை வழங்குகிறார்கள்.

கவியரங்கம்

கவியரங்கத்திற்கு டாக்டர் அர.சிங்காரவடிவேலன் தலைமையேற்க கவிஞர் து. குமரப்பன் கவிஞர்களை அறிமுகப்படுத்துகிறார். கவியரசரின் படைப்புக்களான தாலாட்டு, இத்துமதம், கிறிஸ்தவம், காதல், கருத்து வளம், தத்துவம், அவலம், கற்பனை ஆகிய தலைப்புக்களில் முறையே கவிஞர்கள் அரு. நாகப்பன், சொ. சொ. மீ. சுந்தரம், மரியதாசு, சோம. சிவப்பிரகாசம், தஞ்சை வாணன், மு. மேத்தா, மா. கண்ணப்பன், வைரமுத்து ஆகியோர் கவியரங்கம் நிகழ்த்துகிறார்கள்.

இவ்விழாவை திரு. எஸ். வி. இராமநாதன் (காரைக்குடி) திரு. கு. கருப்பசாமி, திரு. எஸ். சுந்தரராசன் ஆகிய மூவரும் அமைப்பாளர்களாக இருந்து நடத்துகிறார்கள்.

கவியரசு கண்ணதாசன் அவர்களைத் தனக்கு 15 ஆண்டுகளாகத் தெரியுமென்றும் கவிஞர்கள் மூலம், தான் அவருக்கு அறிமுகப்படுத்தப் பட்டதாயும் அந்தச் சில கவிஞர்களின் பேரார்வத்தால் உலக மகா கவிஞரான அவருக்கு இந்த விழா எடுக்க, தான் விரும்பியதாயும் நன்கொடை வசூலித்து அதன்மூலம் இந்த விழாவைச் சிறப்பாக நடத்த எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருவதாயும் அமைப்பாளர்களில் ஒருவரான திரு. எஸ். வி. இராமநாதன் கூறினார்.

இந்த விழா நிகழ்ச்சிகளுக்கு டிக்கெட் கட்டணம் எதுவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யார் பங்காளி?

செட்டிநாட்டவர்களில் கோயில் பங்காளிகள், கூடிக்கிற பங்காளிகள் என்று குறிப்பிட்டுக் கூறுவதுண்டு. 'பங்காளி' என்றால் சொத்தில் பங்குக்கு வருபவன் என்று பொருளல்ல. இன்பத்திலும் துன்பத்திலும் பங்குக்கு வருபவரே பங்காளி.

— பள்ளத்தூர் சுப. அருணாசலம் செட்டியார்
(சேலம் நகரத்தார் சங்க ஆண்டு விழாவில்)

கவியரசர் கண்ணதாசன்


வாழ்ந்தார் ... வாழ்கிறார் ... வாழ்வார் ...

செந்தமிழ்ச் செல்வன் **தி. ராஜா அண்ணாமலை** B. A,

தத்து நடை தடங்கல் நடை இல்லாமலே-இன்பத் தமிழ் நடையை ஈடு இணையில்லாமல் காட்டியவர்; சத்துநடை, முத்துநடை, உருவகங்கள் சதிராட, கருத்துப் பூக் கதம்பங்கள் கட்டி, வித்தை பல விந்தை பல நிகழ்த்தியவர். எத்தனையோ எதிர்ப்புக்கள் இருந்தபோதும் எழில் தமிழர் பண்பாட்டைக் கட்டிக்காக்க நித்த நித்தம் கவிதைகள் தந்து அவர் நிலைக்கின்ற புகழ்க் குன்றாய் நினைந்து வாழ்ந்தார் ...

இன்னும் ஒரு நூறாண்டு இணையின்றி அவர் இருந்து, இனித் தமிழின் ஆற்றல்களை வெல்வதற்கு, இவ்வுலகில் மொழிகளே இல்லையென இறுமாந்திருக்கச் செய்வார் என்றிருந்தோம் ...

ஆனால் ...



நம் கண்கள் குளமாக-கண்ணீர் வழிந்தோட, கவலையே நிழலாட - கதறல் மொழியாக - கசப்பு வழியாகக் காலன் அவரைக் கவர்ந்து விட்டான். பச்சைக் குழந்தை பாலுக்குத் தவித்திருக்க, பெற்றவளை அந்தப் பெருமாள் அழைத்தது போல், இச்சைக் கிளியாய் இயங்கிய தமிழமுதை சேய்க் கிளியைக் கலங்க விட்டுத் தாய்க் கிளியைக் கொன்றது போல் நம்மிடமிருந்து எமன் அவரைப் பிரித்து விட்டான்.

வீணை அறுந்து விடிவிளக்கும் அணைந்தது போல் - கலையழகுச் சிற்பங்கள் உடைந்து கல்வெட்டே அழிந்தது போல் - ஆஸ்பெஸ்டாஸ் கோட்டையே - ஆற அமர எரிந்தது போல் ... அவர் மறைந்து,

கண்ணீர்த் துளிகளின் காவல் தெய்வமாய்,
கருஞ்சலவைக் கோயிலின் கற்பூர தீபமாய்,
தோன்றாமல் தோன்றுகின்ற தொடு வானமாய்
நினைவு முற்றங்களில் கனவுகளை எழுதிய
கற்பனைக் கோலமாய்க் கவியரசர் மாறிவிட்டார்.

பாட்டெழுதிப் பாட்டெழுதிப் பாரதத்துப் பெருமைகளைப் பூ ரதத்தில் ஏற்றி வைத்த புகழ்க்குன்றாய், கொள்கை முழக்கமாய், குழந்தைத் தேன் மனமாய், நகை - அழுகை - இளிவரல் - மருட்கை - அச்சம் -

பெருமிதம் - வெகுளி - உவகை என்னும் எட்டுச் சுவைகளிலும் எழுதி ... எழுதி ... எட்டுத் திக்கிலும் எழில் தமிழின் வரலாற்றைப் பரப்பிய அவர் மறைந்தாலும், எண்ணுகி எழுத்தாகி இலக்கியத்தில் புலவருக்குப் பெண்ணுகிப் பொன்ஞகிப் பூவாகிப் புகழாகி, மண்ணுண்டு நாடாண்டு மனமெல்லாம் நின்ருண்டு, ஆண்டாண்டு வாழுகின்ற அருந்தமிழ் - செந்தமிழ் - அணையாது - வாழும் வரை, தமிழ் கூறும் நல் உலகம் இருக்கும் வரை அந்தக் காலக் கவிஞனின் - யுக புருஷனின் பெருமைகள் மாருதவை.

எழுதப்படும் எழுத்துக்கள் எல்லாம் சரித்திரத்தின் பொன்
எழுத்துக்கள் ஆவதில்லை ... சரித்திரத்தின் பொன்
எழுத்துக்கள் சாதாரணமாக எழுதப்படுவதுமில்லை ...

ஆனல் அவர் வடித்ததெல்லாம் வரலாறு - படைத்ததெல்லாம் பாரதத்தில் புதிய தமிழ் சகாப்தம் ...

நீங்காத நினைவுகளில் நெஞ்சங்களில் அவர் வாழ்ந்தார் - வாழ்கிருர் - வாழ்வார் என்பது உறுதி.

உங்கள் நூலும் எங்கள் ஆய்வும்

ஐம்பது ரூபாய் அண்டா திருடிய
ஆண்டிக்கு ஜெயில் ஆறிரு மாதம்
ஐயா யிரத்தைக் கையாடி யவராம்
அலுவ லகத்துக் காசா ளர்க்கோ
ஐநூறு ரூபாய் அபராதம் மட்டும்
என்னே தர்மம்? என்னே நீதி?

என்று குமுறும் நெஞ்சமும்

ஆங்கொருநாள் தோப்பினிலே அந்திவிழும் வேளையிலே
பாங்குடனே சொன்னசொல்லு பாத்திநீரில் கரைஞ்சுபோச்சா!

என்று குளிரும் நெஞ்சமும் ஒன்று சேர்ந்தால் அதுதான் அருவி மைந்தனின் கவிதைத் தோணி. சமுதாயத்தைச் சாடும் கவிதை தமிழ்க் காதலையும் தழுவிப் பார்க்கிறது. காலமாம் ஆற்றில் கவிதைத் தோணியைச் சீலமாய் ஓட்டும் சிந்தனை வாழ்க!

நூல் - கவிதைத் தோணியிலே. ஆசிரியர் - அருவிமைந்தன்.

வெளியீடு: பாரதி பதிப்பகம், கோனுபட்டு, புதுக்கோட்டை மாவட்டம்
விலை ரூபாய் 2-75

நம்மவர்களில் அரசியல்வாதிகள்

பழ. கருப்பையா பேட்டி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"நகரத்தார்கள் ஏன் அரசியலில் அதிகம் ஈடுபடுவதில்லை?" என்று கேட்டபோது —

"அரசியல் என்பது விடுதலைக்குப் பின்பு அதிகார வேட்டைக்கான களம் என்று ஆகிவிட்டதால் தன்னலக்காரர்கள் ஒட்டு மொத்தமாகக் கூடிக் கொட்டமடிக்கும் இடமாக அது ஆகிவிட்டது.

ஆனால் அரசியலில் தகுதி வாய்ந்தவர்களும், தியாக உணர்வுமிக்கவர்களும் எண்ணிக்கையில் சுருக்கமாகவேனும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதனால்தான் இந்த அரசியல் முறை முற்றிலும் அழிந்துவிடாமல் உயிருடன் இருக்க முடிகிறது.

பொதுவாக அரசியலில் இட்டுக்கட்டிப் பேசுவது, இழிவு படுத்துவது, ஒன்றுக்கும் சரியாக வராவிட்டால் நேரடியாகவே வன்முறையைக் கையாளுவது இவையெல்லாம் மிகுதி.

மிகவும் மென்மையான போக்குடைய நம்முடையவர்களை அரசியல் கவராததற்கு இது ஒரு காரணம்.

இன்னொரு காரணம்; அரசியலின் மூலம் அதிகாரம் கிடைக்கலாம்; ஆனால் எல்லாருக்கும் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் வெகுகாலம் நிலைப்பதில்லை; எதற்காக இதற்குள் தலையைக் கொடுத்து விட்டுத் தவிக்க வேண்டும்?

மேலும் அதிகாரம் என்பது பதவியின் மூலம்தான் வரவேண்டுமா? பணமே ஒரு அதிகாரம்தானே! (money itself is a power) ஆகவே பணத்தைத் தேடினால் போதும்; அது எவ்வளவுக்குப் பெருகுகிறதோ அவ்வளவுக்கு அதிகாரமும் பெருகும்.

இப்படிக் கருதுவோர் நம்மில் கணிசமாக இருக்கின்றனர். இவர்களின் சிந்தனையில் தவறில்லை. இவர்கள் இன்றைய அரசியலைச் சரியாக அறிந்தவர்கள்.

பொதுவாக நகரத்தார்கள் இன்றைக்கிருக்கும் அரசியல் அமைப்பில் அரசியல் ரீதியாக மிகப் பெரிய இடங்களை அடைந்துவிட முடியாது. ஏனெனில் இன்றைய அமைப்பு எண்ணிக்கை வலிமையைச் (numerical strength) சார்ந்து நிற்கிறது. ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட நாம் ஒரு சட்டமன்ற உறுப்பினரைப் பெறுவதே அரிய முயற்சி.

நாம் அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து ஓர் அரசியல் கட்சியை எதிர்த்தாலும் அது அஞ்சாது. ஏனெனில் நம்முடைய எண்ணிக்கை அவர்களுக்கு எறும்பு கடித்த மாதிரி.

ஆனால் படையாச்சி, கவுண்டர், முக்குலத்தோர், நாடார், இசுலாமியர் இவர்களெல்லாம் தனிச் சமூகங்கள் என்ற முறையில் எண்ணிக்கையில் கூடுதலானவர்கள் என்கிற காரணத்தால் எல்லா ஆளும் கட்சிகளும் இச் சமூகத்தினர்க்கு அமைச்சர் பதவிகள் கொடுத்துக் கௌரவிக்கின்றன.

இல்லாவிடில் அடுத்த தேர்தலில் அச் சமூகத்தினர் தம் கட்சிக்கு எதிராக நின்று ஆட்சி வாய்ப்பைச் சிதைத்துவிடக்கூடும் என்று அஞ்சுகின்றனர்.

இப்படி அரசியல் கட்சிகளைத் தன்னுடைய எண்ணிக்கை வலிமையால் வழிக்குக் கொண்டுவரும் ஆற்றல் நகரத்தார் சமூகத்திற்கு இல்லை.

நம்முடைய நிலையே இதுவானால் இன்னும் இளவகச் செட்டியார், முறையூர்ச் செட்டியார், ஏரியூர்ச் செட்டியார் இவர்களின் நிலையெல்லாம் என்ன ?

இதுவும் கூட நகரத்தார் சமூகத்தினர் போதிய அளவுக்கு அரசியலில் ஈடுபடாததற்கு ஒரு காரணமாய் இருக்கக்கூடும்.

இவ்வளவையும் மீறிப் பொது வாழ்க்கையில் ஈடுபட்டுப் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர்கள் நம்மில் குறிக்கத்தக்க அளவுக்கு உண்டு. அவர்களில் முதன்மையானவர்கள் தமிழ்க்கடல் ராய. சொ., சா. கணேசன் ஆகியோர்.

இவர்கள் விடுதலை வேள்வியில் தங்களைப் பொசுக்கிக் கொண்டவர்கள். ஆனால் அவர்களிலே கூட அதிகார அரசியல் என்று வந்தபோது ராய. சொ. ஒரு முறை நகர மன்றத் தலைவராக வர முடிந்தது; சா. கணேசன் ஒரு முறை சட்ட மன்ற உறுப்பினராக வர முடிந்தது. அவ்வளவுதான்.

அவர்களும் பிந்திய காலங்களில் மிகவும் களைப்படைந்து அரசியலை விட்டுவிட்டார்கள்.

இத்தகைய முன்மாதிரிகளும் கூட நகரத்தார் சமூகத்தின் அரசியல் நாட்டத்தை வெகுவாய்க் குறைத்திருக்கலாம்.

நான்கூட நெருக்கடிநிலைக் காலத்தில் சனநாயகக் காப்புணர்ச்சி காரணமாக வேகம் மிக்க அரசியல்வாதியாகத் திகழ்ந்தேன். இன்று 'நம்முடைய வேலைவெட்டியெல்லாம் கெட்டுவிடுகிறதே' என்று பழைய வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறேன். 'இப்பத்தான் புத்தி வந்திருக்கிறது' என்று எங்கள் வீட்டு ஆச்சி சொல்கிறார்கள்.

பொதுவாக என்னுடைய கருத்து: நகரத்தார் சமூகத்தினர் அதிக எண்ணிக்கையில் பொது வாழ்க்கையில் ஈடுபடவேண்டும். அதிகாரத்தை அடைவதற்காக அன்று; ஏனெனில் அதை நாம் அடைவது அவ்வளவு எளிதில்லை.

ஆயிரத்தைநூறு ஆண்டுகளாக கொலை, களவு போன்ற தீய நடத்தைகளுக்காகச் சிறைக்குப் போகாத சமூகம் நகரத்தார் சமூகம். இரத்தத்திலேயே அற உணர்வு ஊறிக் கிடக்கிறது. இத்தகையவர்கள் பொதுவாழ்வில் ஈடுபடுவதன் மூலம் தமிழ்ச் சமுதாயம் மிகுந்த நன்மையை அடையும்; பொது வாழ்க்கை மேலும் தூய்மை பெறும்.

அதெல்லாம் சரி; உங்கள் பத்திரிகையின் ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் ஏன் அரசியலில் ஈடுபடவில்லை? ஒரு தலைவராவதற்குரிய எல்லா அம்சங்களும் அவரிடம் இருக்கின்றனவே!

ஆட்களை அணைத்துச் செல்லத் தெரிந்திருக்கிறது; மற்றவர்களை மதித்துப் பெருமைப்படுத்திப் பெருமையடையத் தெரிந்திருக்கிறது; பார்ப்பதற்கும் ஜோட்டசாட்டமாகத் தோற்றப் பொலிவுடன் இருக்கிறார்; presence of mind இருப்பதால் நகைச்சுவையுடன் கூட்டத்தில் உடனுக்குடன் பதில் சொல்லத் தெரிந்திருக்கிறது.



ஒரு பக்கம் அழகுசுந்தரம் செட்டியார் போன்ற மதிப்புக்குரிய பெரியவர்களும், இன்னொரு பக்கம் எழிலரசன், உடையப்பன், குமரப்பன் போன்ற ஆரவாரமிக்க இளவயதினரும், மற்றொரு பக்கம் சொ. சொ. மீ. சுந்தரம் போன்ற ஆற்றல் சான்ற கவிஞர்களும் என்று இப்படி எல்லாத் தரப்பினரையும் இவரால் கவர முடிகிறதென்றால் இது வியப்பில்லையா?

காரைக்குடி மாநாடு இவரை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது''— இவ்வாறு பதிலளித்தார்.

''நகரத்தாரைப் பிற்படுத்தப்பட்டோராக அறிவிக்கக்கோரி காரைக்குடியில் நடந்த மாநாடு பற்றித் தங்கள் கருத்தென்ன?''

முதலில் அந்த மாநாடு ஒரு வெற்றி என்றே சொல்ல வேண்டும். குறிக்கோளைச் சூட்டோடு சூடாக அடைய முடியவில்லை என்றாலும் இவ்வளவு உணர்ச்சியோடும் உந்துதலோடும் கடந்த ஒரு தலைமுறைக் காலத்தில் நாம் இது போல் வேறொன்றுக்காகக் கூடியதுண்டா?

பர்மா தேக்கில் வீடு கட்டி, செருமன் சட்டிகளில் சமையல் செய்து மோல்மேன் குறிச்சிகளில் சாய்ந்து கிடந்த காலம் போய்விட்டது என்ற உணர்வு நம்மில் எல்லோருக்கும் வந்து விட்டது என்பதைத்தானே மாநாட்டில் கூடிய மக்கள் திரள் காட்டியது. இவ்வளவு நகரத்தார் பெண்டுகளை ஒரு சேர நாம் எங்கேயாவது கண்டிருக்கிறோமா?

சரிவு நம் கண்ணுக்குத் தெற்றெனத் தெரிகிறது; அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற உணர்ச்சியும் இருக்கிறது. இத்தகைய உணர்ச்சியை ஒருங்கு திரட்டிக் காட்ட வேண்டாமா? அப்பொழுது தானே அரசுக்கு உறைக்கும்! அந்தப் பணியை மாநாடு செய்தது. ஆகவே அது அந்த அளவுக்கு வெற்றிதானே!

சிலர் முணுமுணுக்கக் கூடும், 'என்ன வெற்றி! காரியம் ஒன்றும் ஆக வில்லையே! கூடினோம்; கலைந்தோம்; இதனால் ஒரு நாள் வேலை கெட்டதுதான் கண்ட பலன்' என்று.

நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்: மனம் சலிக்க வேண்டாம்; தொடர்ந்து போராடினால் வெற்றி கிடைக்கும்; குறைந்தது 'பெட்டி முடைந்து' வாழ்க்கை நடத்துகிற சிட்டாள் ஆச்சி குடும்பத் திற்காவது அரசின் சலுகைகள் கிடைத்தாக வேண்டும்; செட்டி நாட்டரசர் குடும்பத்திற்கும் அழகுசுந்தரம் செட்டியார் குடும்பத்திற்கும் இது கிடைத்தால் என்ன? கிடைக்கா விட்டால் என்ன?

ஆகவே நாம் ஒட்டுமொத்தமாக நகரத்தார் சமூகம் முழுமைக்கும் என்று கேட்டிருக்கக் கூடாது; அது நம் கோரிக்கையின் வலிமையைக் குறைக்கும். ஏனெனில் நம்மவர்களில் கோடீசுவரர்கள் சிலராக இருப்பினும் அவர்கள்தாம் அரசின் கண்ணையும் பிறரின் கண்ணையும் உறுத்திக் கொண்டிருப்பர்.

பிற்படுத்தப்பட்டோர் என்று அரசால் பட்டியல்படுத்தப் பட்டுள்ளோரில் வலையர் போன்று ஓரிரண்டு சமூகம் நீங்கலாகப் பிற சமூகங்களெல்லாம் சமூக ரீதியாகப் பிற்படுத்தப்பட்டவை என்று இன்றைய நிலையில் சொல்ல முடியாது.

ஆகவே வலையர் போன்ற சமூகங்களுக்கு வேண்டிய சலுகைகளை அளித்துவிட்டு, மீதியுள்ள எல்லாச் சமூகங்களிலும் ஒன்பதாயிரம் ரூபாய் வருமானத்திற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கே சலுகை என்று அரசு அறி விக்க வேண்டும்.

பொருளாதார ரீதியாக [Economically Backward] பின் தங்கி யோர் அனைவரின் மீதும் அரசின் பரிவுப் பார்வை விழ வேண்டும்; அரசின் அத்தகைய பரிவுப் பார்வைக்கு நகரத்தாரில் நலிந்தவர்களும் இலக்காக வேண்டும்.

ஏழையில் நகரத்தார் வீட்டு ஏழைக்கும் நாடார் வீட்டு ஏழைக்கும் என்ன வேறுபாடு?

ஏழையாகப் பிறப்பதே சாபக்கேடு; அதுவும் நகரத்தார் போன்ற வகுப்பில் ஏழையாகப் பிறப்பது இன்னும் மோசமான சாபக்கேடு என்பது போலல்லவா இன்றையச் சட்ட திட்டங்கள் இருக்கின்றன.

ஆகவே 'ஏழைகளெல்லாம் பின்தங்கியோரே' என்ற முழக்கத் தை நாம் முன் வைத்திருந்தால் முற்படுத்தப்பட்ட எல்லாச் சமூகத்தின ரின் ஆதரவும் கிடைத்திருக்கக்கூடும்.

அது வலுவாக இருக்கும்; அரசின் கவனத்தை ஈர்க்கும்; ஒட்டு மொத்தமாக எல்லா முற்பட்ட வகுப்பாரையும் புறக்கணிப்பது ஒரு சனநாயக நாட்டில் எந்த அரசாலும் முடியாது; மேலும் நம் கோரிக் கையிலுள்ள நியாயத்திலிருந்து அரசு தப்ப முடியாது.

இவை எல்லாம் என் சொந்தக் கருத்துக்கள். நகரத்தார் சமூகம் முழுமையையும் பின் தங்கியோராக அறிவிக்க வேண்டும் என்று நாம் மாநாடு கூட்டியபோது நம் சமூகத்தில் இருந்த ஏழைகளைத்தான் நாம் மனதில் கொண்டிருந்தோமாதலின் அரசு ஒரு சமரசத்திற்கு அழைத் தால் நம்மவர்கள் எளிதாக அதை ஏற்றுக்கொள்வர் என்று கருது கிறேன்.

ஆனல் அரசு அவ்வளவு எளிதாக அவ்வளவு வேகமாக கீழே இறங்கி வந்து விடாது. இருப்பதை அப்படியே வைத்துக்கொண்டு (Status quo) காலந் தள்ளத்தான் எந்த அரசும் கருதும். ஏனெனில் மாறுதல் செய்யும்போது பக்க விளைவுகளும் பின் விளைவுகளும் ஏற்படும் என்று எந்த அரசும் அஞ்சும்.

ஆகவே நாம் தொடர்ந்து போராடி ஆக வேண்டும்.

இவ்வளவு பெரிய காரியத்திற்கு ஒரு தொடக்கம் செய்த லெ. அழகுசுந்தரம் செட்டியாரையும், வி. என். சிதம்பரம் செட்டியாரையும், லெட்சுமி சிங்காரம் செட்டியாரையும் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

பேட்டி : எல். சுந்தரம்

ஓர் யோசனை ...

நமக்கென்று தனி மருத்துவ மனை

மதுரை நகரில் வசிக்கின்ற நம் சமூகத்தைச் சார்ந்தவர்களுக் கென்று ஒரு பொது தரும மருத்துவ மனை (Charitable Hospital) இது வரை உருவாகாதது பெரிய குறையல்லவா? மற்ற சமூகத்தினர் இது போல் மருத்துவ மனைகளை வெற்றிகரமாக நடத்தி வருகையில் நாமும் ஏன் நமக்காக அப்படியொரு அமைப்பை உருவாக்கிக் கொள்ளக் கூடாது? அப்படி ஒரு அமைப்பு ஏற்பட்டால் அதனல் நம்மவர்களில் பொருளாதார வசதி குறைந்தவர்கள் பயனடைய முடியும். மற்ற சமூகத்தினருக்கும் சேவை செய்யலாம். நிர்வாகச் செலவைச் சரிக் கட்ட, தேவையானல் குறைந்த அளவில் கட்டணம் வசூலிக்கச் செய்ய லாம். ஆகவே பொது மருத்துவ மனை ஒன்றை மதுரை நகருக்குள் ஏற்படுத்த நம்மிடையே உள்ள பெருந்தனக்காரர்களும் பெரியவர்கள், தொண்டுள்ளம் கொண்டவர்களும் முயற்சி மேற்கொள்வார்களா?

— டாக்டர் ஜெ. பழனியப்பன்,
வலையபட்டி.

டாக்டர் தமிழண்ணல் உதிர்த்த முத்துக்கள்!

(சேலம் நகரத்தார் சங்க ஆண்டு விழாவில்)

ஒட்டிப் பேசும் நம்மவர்கள்

யாராக இருந்தாலும் அவர்களோடு 'முனை முறியாமல்' பேசி விடுவித்துக் கொள்பவர்கள் செட்டியார்கள். யாரையும் பழித்துக்கூற மாட்டார்கள். வெட்டிப் பேசாமல் ஒட்டிப் பேசும் வியக்கத்தக்க பண்பாடு கொண்டவர்கள் நம்மவர்கள்.

தமிழ் வளர்க்கும் நகரத்தார்கள்

'உதியன் சேரன்' என்றால் 'உதியன் மகன் சேரன்' என்று பொருள். அதுபோலச் செட்டியார்களும் மொய்ப் பண ஏட்டில் இராமநாதன் செட்டி சுப்பிரமணியன் என்று எழுதினால் இராமநாதன் செட்டியார் மகன் சுப்பிரமணியன் என்று பொருள். சங்க கால மரபைப் பின்பற்றித் தமிழை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் நகரத்தார்கள்.

அவன்தான் துணை

செட்டிமக்கள் கப்பலுக்கு அன்று செந்தூரான் துணை. இன்று நமக்குக் கப்பல் கிடையாது. ஆனால் நம் வாழ்க்கைக் கப்பலுக்கு என்றுமே அவன்தான் துணை.

செட்டி மக்கள் குலவிளக்கு

பாரதி வாழ்ந்த காலத்தில் வெள்ளையர் கொடுமைக்குப் பயந்து பலரும் அவரை ஆதரிக்கவில்லை. அவர்கள் எல்லாம் இன்று பாரதியாரைப் பற்றிச் சிறப்பாகப் பேசுகிறார்கள். ஆனால் பாரதியார் வாழ்ந்த காலத்திலேயே அரசுக்கு அஞ்சாமல் அவரை ஆதரித்து வேண்டியவை எல்லாம் கொடுத்தவர் கானாடுகாத்தான் வை. சு. சண்முகம் செட்டியார் ஆவார். இவரைச் 'செட்டி மக்கள் குலவிளக்கு' என்று பாரதி குறிப்பிட்டார்.

வட்டியும் தட்டும்

ஆச்சிமார்கள் முன்பு 'வட்டியில் சாப்பிடு' என்பார்கள். அசலில் சாப்பிடாமல் வட்டியில் சாப்பிடவேண்டும் என்று பொருள். இது முன் கால நிலை. இன்று ஆச்சிமார்கள் 'தட்டில் சாப்பிடு' என்கிறார்கள். 'தட்டு' என்றால் 'முடை' என்று பொருள். இன்று வருவாய் குறைந்து விட்டது. எல்லோருக்கும் உணவு வேண்டும். எனவே பார்த்துச் சாப்பிடுங்கள் என்று ஆச்சிமார்கள் அறிவுரை கூறுகிறார்கள் போலும். காலத்திற்கேற்ற சொல்லைப் பயன்படுத்தும் ஆச்சிமார்கள் மிகவும் கெட்டிக்காரர்கள் அல்லவா!

வாசனையும் யோசனையும்

முல்லைப் பூக் கட்டிடமாம்
  முகப் பெல்லாம் உத்தரமாம்
முகப்பைத் திறந்து விட்டால்
  முல்லைப் பூ வாசனையாம் ... ஐயா
மூத்தவுக யோசனையாம்

என்பது செட்டிநாட்டுத் தாலாட்டு. சின்னப் பிள்ளைக்கு மூத்த தலைமுறைப் பெருமையைக் காட்டும் பாட்டல்லவா இது!


செட்டிநாடு கோவிலில் பூச் சொரியல் விழா

அரச குடும்பத்தினர் செட்டிநாட்டில் நிறுவியுள்ள அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலில் 14-4-82 அன்று தமிழ்ப் புத்தாண்டு விழாவும் கொத்தரி அருள்மிகு சோலே ஆண்டவர் பூச் சொரியல் 42 ஆவது ஆண்டு விழாவும் நடைபெறுகிறது. அன்று மாலே 6 மணிக்கு சேலம் இசைப் பேரரசி டாக்டர் எஸ். ஜெயலெட்சுமியின் பக்தி இன்னிசையும் இரவு 7மணிக்கு மேற்படி திருக்கோவிலில் சிறப்பு அபிஷேக சந்தன அலங்கார வழிபாடுகளும் நடைபெறுகின்றன. இரவு 9-30 மணிக்கு புஷ்பத்தேர் புறப்பட்டு அருள்மிகு சோலே ஆண்டவர் கோவிலில் பூச் சொரிதல் வழிபாடுகள் நடைபெறும்.

மகேஸ்வர பூஜை

புதுக்கோட்டை மாவட்டம் மேலேச்சிவபுரி சுப்பய்யா கோவில் அருள்மிகு சக்தி வேலாயுத சுவாமிக்கு 7-5-82 முதல் 9-5-82 வரை மூன்று தினங்கள் மகேஸ்வர பூஜை நடைபெறவிருக்கிறது.

மேற்படி நாட்களில் இன்னிசைக் கச்சேரிகளும், பட்டி மன்றம், கவியரங்க நிகழ்ச்சிகளும், கணபதி ஓமம், ஸ்காந்த ஓமம் சண்முகா அர்ச்சனையும் நடைபெற உள்ளன.



உங்கள் குரல்...

நம் சமூகத்தினர் பற்றிய விவரங்களை தங்கள் ''நகரத்தார் குரல்'' மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. மிக்க மகிழ்ச்சி. இது போன்ற இதழ்கள் எல்லா விவரத்துடன் வரவேண்டுமென்பதே நம் எல்லோருடைய எண்ணம். இதழ் சிறப்புடன் திங்கள் தோறும் வர நம் சங்கத்தின் அன்பும் ஆசியும்.

பழ. பெரிச்சியப்பன்,
செயலாளர்,
நகரத்தார் ஐக்கிய சங்கம், சென்னை.

எங்கள் கல்வித் தகுதிக்கேற்ப வேலை கொடுக்க மறுக்கும் நகரத்தார்கள் எங்களைப் போன்ற ஏழைகளுக்காகக் கண்ணீர்விடத் தொடங்கியுள்ள அதிசயத்தை தங்கள் ''நகரத்தார் குர''லில் கண்டேன்.

கவிஞர் அரு. சுந்தரம், எம். ஏ., பி. எட்..
நாட்டரசன்கோட்டை.

'நகரத்தார் குரல்' மார்ச் இதழில் மனங் குமுறும் சில விவரங்கள் பேட்டிக் கட்டுரையில் இடம் பெற்றுள்ளது குறித்துப் பாராட்டுக்கள். நல்ல ஆக்கங்கள் பல வெளிவரவும் வேண்டுகிறேன். வலையபட்டி யாரின் கருத்து மழையில் கலைஞன் நான் நனைந்து போனேன்.

முல்லை காந்தி இராமசாமி,
தேவகோட்டை.

சொத்துக்களும் பொறுப்புக்களும்

செட்டியார்களுக்கென்று நாணயம் தவறாமை, அறம் செய்தல் முதலிய நல்ல பாரம்பரியங்கள் இருக்கின்றன. இவற்றைப் பின்பற்றுவோருக்கு இவை சொத்துக்கள் (Assets). பின்பற்ற தவர்களுக்கு இவை பொறுப்புக்கள் (Liabilities).

— பள்ளத்தூர் சுப. அருணாசலம் செட்டியார்
(சேலம் நகரத்தார் சங்க ஆண்டு விழாவில்)



நகரத்தார் நல உரிமை மாநாட்டு மலர் வெளியீட்டு விழாவில் மதுரை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திரு. எஸ்.கே. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமை உரையாற்றுகிறார். அருகில் திரு. கருமுத்து தி. சு. சொக்கலிங்கம் செட்டியார்.



நகரத்தார் குரல் இதழை அழகாக அச்சிட்டுத் தரும் 'எக்ஸ்போ பிரிண்டர்ஸ்' உரிமையாளர் திரு. ஏ. பழனியப்பனுக்கு தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் கே. காளிமுத்து அவர்கள் ''நகரத்தார் குரல்'' வெளியீட்டு விழாவில் பரிசளிக்கும் இனிய காட்சி.



சேலத்தில் 21-3-82 அன்று நிகழ்ந்த நகரத்தார் சங்க ஆண்டு விழாவில் தலைவர் திரு. M. S. உடையப்ப செட்டியார் உரை யாற்றுகிறார். அருகில் டாக்டர் தமிழண்ணல், திரு. M. S. சொக்கலிங்கம் செட்டியார், திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், திரு. PL. அண்ணாமலை செட்டியார் ஆகியோர் உள்ளனர்.



சேலம் நகரத்தார் சங்க ஆண்டு விழாவில் தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. ராஜாராம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகிறார்.



சேலம் நகரத்தார் சங்க ஆண்டு விழாவில் திரு. *T*. சிதம்பரம் வரவேற்றுப் பேசுகிறார். அருகில் நகரத்தார் பெருமக்கள்.



புதுவயல் நகரத்தாருக்குச் சொந்தமான அருள்மிகு கைலாச விநாயகர் கோவிலுக்கு புதுவயல் வீர. சு. வ. சுப்பிரமணியன் செட்டியார் - சிகப்பி ஆச்சி நினைவாகக் கட்டிடம் கட்டப்பெற்று திறப்பு விழா நடைபெற்றபோது திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் உரையாற்றுகிறார். அருகில் திரு. எஸ். மெய்யப்பன், திரு. பெரி. சிவனடியான், திரு. எஸ். அழகப்பன் உள்ளனர்.

பணக்காரத் தன்மையும் படித்தோர் தொகையும்



அண்ணுமலை செட்டியார் கட்டியபல்கலைக்கழகம் செட்டியார்களுக்காக மட்டும் கட்டப்படவில்லை. எல்லோருக்காகவும் கட்டப்பட்டது. அரசர் அண்ணுமலையார் அறக்கட்டளையில் இன்று சென்னையில் மட்டும் 11 ஆயிரம் மாணவர்கள் படிக்கிருர்கள். அழகப்பரும் தியாகராசரும் பலருக்கும் கல்வி தந்தார்கள். நகரத்தார்கள் பணக்காரர்களாக இருப்பதால் அவர்களைப் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கூடாது என்பதில்லை படித்தோர் தொகை குறைவு என்று காட்டிஞல் இந்தச் சமூகத்தைப் பிற்பட்ட சமூகமாக ஆக்க அரசு தயங்காது.

— க. இராஜாராம்
தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர்
(சேலம் நகரத்தார் சங்க ஆண்டு விழாவில்)

நாணயமும் நகரத்தாரும்!

பெரிய அளவில் முதலீடு செய்து பெருந்தொழில் செய்யும் அறிவும் ஆற்றலும் பெற்றவர்கள் நகரத்தார்கள். கோதாவரிக்கும் காவிரிக்குமிடையில் பெட்ரோல் கிடைக்குமெனத் தெரிகிறது. நகரத்தார்கள் இணைந்து பெரிய அளவில் முதலீடு செய்து தமிழர் வளத்தால் தமிழர் பிள்ளைகள் வேலை வாய்ப்புப் பெற உதவ வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன். உங்களுக்கு நாணயம் இருக்கிறது. எனவே இதற்கு நீங்கள்தான் பொருத்தமானவர்கள்.

— க. இராஜாராம்
தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர்
(சேலம் நகரத்தார் சங்க ஆண்டு விழாவில்)

சிறுகதை

உயர்வு, பணத்தில் இல்லை

வ. தேனப்பன் எம். ஏ.,
தேவகோட்டை

போன் ட்டிரிங்கியது. கிர்ரிங் . கிர்ரிங் . என்று செல்லமாக அந்த வீட்டுக்காரரைக் கூப்பிட்டது.

மேனேஜர் மாணிக்கம் அதன் கழுத்தைப் பிடித்துக் கோபமாகத் தூக்கினர். போன் காதோடு ஒட்டிக் கொண்டது.

போனில் அவருக்குப் பிடிக்காத ஒருவர் பேசுகிருர் என்பது, அவர் வாயைத் திறக்காமல் மூக்கு மூலமாகவே 'ம் ம்' என்று சொல்வதிலிருந்து தெரிந்தது.

''பெரிய செட்டியாரை நான் இப்போ வந்து பார்க்கலாமா?'' —போனிலிருந்து கொஞ்சி வழிந்தது ஒரு குரல்.

''அவங்க இருக்காங்களான்னு பாத்துச் சொல்றேன்'' என்றபடி போனின் வாயை அடைத்து ''ஏய்! கருப்பையா பெரிய செட்டியார் இருக்காங்களா பாரு!'' என்று போலியாகக் கேட்டுவிட்டுப் போனின் வாயைத் திறந்தார்.

''பெரிய செட்டியார் வீட்டுல இல்லீங்களே!'' என்று சொல்லி விட்டுப் போனைத் தூக்கில் போட்டார்.

அமெரிக்காவிலிருந்து பெரிய செட்டியார் வாங்கி வந்த புது மாதிரியான தொங்கும் டெலிபோன் ஊசலாடியது — மேனேஜரின் மனத்தைப் போல.

போனில் பேசியது வேறு யாருமில்லை. பழைய மேனேஜர் அடைக்கலவன்தான். அவரை நினைத்தாலே பற்றிக்கொண்டுவரும் மாணிக்கத்திற்கு. 'நம்பிக்கைத் துரோகி' என்பது அவர் கொடுத்த பட்டம்.

'வேளா வேளைக்குக் குடிப்பதற்குக் கஞ்சிகூடக் கிடைக்காமல் திண்டாடியவனைப் போனல் போகட்டுமென்று கூட்டி வந்து பணிக்கம் தூக்குகிற பையனுக வைத்துக் கொண்டார் பெரிய செட்டியார். பிறகு அடுத்தாளாக்கினர். அப்புறம் ஏஜென்டாக ஆக்கிப் பங்கும் வைத்துக் கொடுத்து வட்டிக் கடையில் கூட்டாளியாக்கிக் கொண்டார். வட்டிக் கடை 'உட்கார்ந்ததும்' இவனை விரட்டிவிட்டாரா? அப்போதே விரட்டி இருந்தால் நன்ருக இருக்கும்.'

'ஏதோ ஒரு அச்சகம் விலைக்கு வருகிறதென்று ஓடி வந்தான். பெரிய செட்டியாரைக் கரை கரையென்று கரைத்தான். அந்தப்பக்கம் எவ்வளவு கமிஷன் அடித்தானே தெரியவில்லை. அச்சகத்துக்கு இவனையே மேனேஜர் ஆக்கினர், வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கிற பெரிய செட்டியார். அப்போதே வேண்டாம் என்று

சொன்னேன். கேட்டால்தானே? அச்சகத்திலேயே அதிகப் பணத்தைப் போட்டார். அப்புறம் பேப்பர் கடை வைக்கச் சொன்னுன், வைத்தார். அதற்கப்புறம் பதிப்பகம் வைக்கச் சொன்னுன். வைத்தார். என்ன மருந்து போட்டானே என்ன மந்திரம் செய்தானே! அவன் சொன்னது தான் வேதவாக்கு என்று போட்டார். அவர் பணத்தில் அவன் எல்லாத் தொழில் நுட்பங்களேயும் கற்றுக்கொண்டு போன வருஷம் தனியாக ஒரு பதிப்பகத்தைத் தொடங்கிவிட்டான். நம்பிய பெரிய செட்டியாரை நட்டாத்தில் விட்டு விட்டுச் சொந்தத் தொழில் செய்கிருனும் நம்பிக்கைத் துரோகி. என்னமாய்ப் பேசுகிருன்! பெரிய பெரிய ஆட்களேயே கவிழ்த்து விடுகிருனே!' என்று பெருமூச்சு விட்டார் மாணிக்கம்.

'இப்பொழுது போனில் வந்த செய்தியைப் பெரிய செட்டியாரிடம் எப்படிச் சொல்வது? அதற்கு அவர் என்ன பதில் சொல்லுவார்? தனக்குக் கீழே வேலே பார்த்த ஆள், இன்று ஒரு பேப்பர் மில்லுக்குப் பார்ட்னர் ஆகிவிட்டானே என்று கேள்விப்பட்டதும், அவருடைய பலகீனமான இருதயம் தொடர்ந்து துடிக்குமா?' என்று அசை போட்டார் மாணிக்கம்.

அவருக்கு நினேக்க நினேக்கப் பொருமை பொங்கிக் கொண்டு வந்தது.

'நான் பார்க்கப் பிறந்த பையன் எனக்கு மேலாகக் கிடுகிடு வென்று உயர்ந்து விட்டானே!'

'என்ன கொழுப்பிருந்தால் தனது பேப்பர் மில்லேத் திறந்து வைக்கப் பெரிய செட்டியாரையே கூப்பிடுவான்? உன்னுல் இப்படி முடியுமா என்று சவால் விடுகிருனே? இப்படி இதைப் பெரியவரிடம் சொல்லாமலேயே, அவர் ஊரில் இல்லே என்று அடைக்கலவனிடம் சொல்லி விடலாமா?'

'வேண்டாம். சொல்லாமல் மறைப்பதைவிடச் சொல்லி அவனது நம்பிக்கைத் துரோகத்தை உறுதிப்படுத்தி விடலாமே' என்றபடி பெரிய செட்டியார் 'மேனு'வைப் பார்க்கச் சென்ருர் மாணிக்கம்.

பெரிய செட்டியார் சோபாவில் சாய்ந்தபடி பகவத் கீதை படித்துக் கொண்டிருந்தார்.

முதலில் விஷத்தைத் தெளிக்கலாமா அல்லது விஷயத்தைச் சொல்லலாமா என்று திணறிய மாணிக்கம், செட்டியாரின் மனநிலேயை அறிந்து கொள்வதற்காக முதலில் விஷயத்தைச் சொன்னுர்.

பதறப்போகிருர் செட்டியார் என்று, அவர் முகத்தையை பார்த்துக் கொண்டு, அவன் போனில் அழைத்ததைச் சொன்னுர் மாணிக்கம்.

"நிஜமாகவா?" என்று மெய்சிலிர்க்கக் கேட்டார் பெரியவர்.

"ஆமாம்" என்று தலேயாட்டினுர்.

"அப்ப உடனே போன் கால் போடுங்க!"

"எதுக்காக ஐயா? அவன் நமக்குப் போட்டியா மட்டுமில்லே, நமக்கும் மேலே முன்னேறுகிற போது, நாம போயித் தொடங்கி வைக்கலாமா?"—பட்டென்று விஷயத்தைப் போட்டு உடைத்தார்.

'' மாணிக்கம், நம்ம கிட்டே கைபழகின ஒருத்தன் நம்மைவிட ஒசந்துட்டதுனுல, நாம தாழ்ந்தா போயிடுவோம்? ' அடைக்கலவன் ரொம்ப முயற்சியான பையன்; ரொம்ப உசந்த நிலேக்கு வருவான்னு நான் சொன்னதை மெய்ப்பிச்சுக்கிட்டு வாரான். உண்மையிலேயே எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியா இருக்குத் தெரியுமா? கண்டிப்பா அவனுேட பேப்பர் மில்லேத் திறந்து வைக்க நான் போகத் தான் போறேன்!'' என்ருர் உறுதியாக.

''முதலாளி! நாம பேப்பர் மில் தொடங்கணும்னு திட்டம் போட்டிருக்கபோது, அவன் போட்டிக்கு மில் திறக்கிருன். அதுனுல தான் வேண்டாம்கிறேன்! ''

'' மாணிக்கம், உனக்கு இந்தச் சேதி தெரியாது. அவன்தான் என்னேயும் ஒரு பேப்பர் மில் தொடங்கச் சொன்னுன். எனக்குப் போட்டியா அவன் இருக்கதும் நல்லதுதான். ஏன்னு, போட்டி அதிகமாக அதிகமாகத்தான் நமக்கும் உற்சாகம் வரும். அதிகமா பாடுபட்டு உழைக்கலாம். ஒருத்தனுடைய உயர்வு அடுத்தவனே எந்த விதத்திலேயும் தாழ்த்தாது. தொழில்லே போட்டி வேண்டியதுதான்; பொருமைதான் கூடாது. அது அடைக்கலவனுக்கிட்டே கொஞ்சம் கூடக்கிடையாது!'' என்றபடி போனே எடுத்துக் காதோடு அணேத்துக் கொண்டார் ' பெரியவர்.'

முற்பட்டோர் குலமென்று முத்துப் பெயர் வேண்டாம் (தாலாட்டு)

கவிஞர் T. குமரப்பன்
வேந்தன்பட்டி

ஆராரோ ஆரிரரோ ஆரிரரோ ஆராரோ...

வீடுநிலை பிரித்து விற்றுவிட்டுக் குலம் காத்துப்
பாடுபடும் நகரத்தார் பாரதத்தின் மிகுதி என
நல்ல கணக்கினையே நாடாளும் அரசுக்கு
மெல்லவே வலியுறுத்தி மேலான வாழ்வமைக்கக்
கண்ணே நீ வளர்ந்து கட்டழகாய்ப் புகழ்பெறவே
எண்ணமிகு தம்பீ! எழிலே நீ கண்வளராய் (ஆராரோ)

வட்டிக் கடைபோச்சு வகைமிகுந்த தொழில் போச்சு
கட்டிக் கரும்பெல்லாம் கல்விகற்க வழிதேட
கெட்டியாய் சிந்திக்க கெடுதல்களை நீக்கிடவும்
செட்டிமார் திருமணங்கள் செலவு நடை குறைந்திடவும்
அருமை மகனே அன்புள்ள தேனமுதே!
பெருமை வழி காட்டும் பேரன்பே கண்வளராய்!
(ஆராரோ)

மட்டில்லா மகிழ்ச்சியுடன் மாமதுரைப் பட்டணத்தில்
மொட்டைக் கோபுரத்தை முழுச்செல்வம் செலவழித்துக்
கட்டிவைத்த பரம்பரையார் கனத்ததொழில் இல்லாமல்
செட்டிமக்கள் இந்நாளில் திகைத்திருக்கக் கண்டோமே
நாம்வைத்த பள்ளிகளில் நாம் படிக்க மாட்டாமல்
தேம்பும் நிலைமாற்றிச் செல்வமே கண்வளராய்
(ஆராரோ)

திறமிகுந்த கல்வியையும் தித்திக்கும் அலுவலையும்
அரசு உதவியின்றி எம் அரசெல்லாம் வாடாமல்
சிறப்பாக தாங்கள்பெற சீர்மிகுந்த திட்டம் தீட்டி
தரமுயர வாழ்ந்துவரத் தகுதிநிலை பெருகி வர
முற்பட்டோர் என்கின்ற முத்துப்பெயர் இல்லாமல்
பிற்பட்டோர் வகுப்பிணைக்க பெருமுயற்சி செய்திடுவோம்.
(ஆராரோ)

பிற்பட்டோர் பட்டியலில் நகரத்தார்?

நகரத்தார் சமூகத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது குறித்து அரசு பரிசீலித்து வருவதாகத் தமிழக நிதி அமைச்சர் மாண்புமிகு நெடுஞ்செழியன் கூறியுள்ளார்.

"நகரத்தார் சமூகத்தைப் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா? அப்படியானல் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?" எனச் சட்ட மன்ற உறுப்பினர் திரு. சிரா. லட்சுமி காந்தன் தமிழக மேலவையில் ஒரு வினு எழுப்ப —

"இதர வகுப்பினர்களிடமிருந்தும் வந்துள்ள கோரிக்கைகளுடன் நகரத்தார் சமூகத்தின் கோரிக்கையும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது" என்று அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பதிலளித்திருக்கிறுர்கள்.

ஆதாரம்: "தினமலர்"
தேதி: 7-3-82

தாயும் பிள்ளையும்

சொ. சொ. மீ. சுந்தரம் எம். காம்.

பெற்ற தாய்க்குப் பிள்ளை மீது என்றும் பாசமுண்டு. அந்தப் பிள்ளையும் தாய் மீது பாசம் வைத்திருந்தால் தாயின் மன மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது. பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்க்கே இந்தப் பாசம் இருந்தால், உலகமெல்லாம் பெற்றெடுத்து ''அகிலாண்ட கோடி உலகீன்ற பின்னையும் கன்னியென மறை பேசும் ஆனந்த ரூப மயிலான'' மீனாட்சி அம்மைக்கு, ஆன்மாக்களின் மீது எவ்வளவு கருணை இருக்கும்! இந்தக் கருணையினால், பசித்துக் கிடந்த பிள்ளைக்குச் சோறு போட்டாள் பராசக்தி.

அமராவதி புதூரைச் சேர்ந்த நாகப்ப செட்டியார், தன் தம்பி வெங்கடாசலம் செட்டியாரின் துணையோடு, மதுரைக் கோயிலுக்குத் திருப்பணி செய்தார். மொட்டைக் கோபுரம் என்று கூறப்பட்ட வடக்குக் கோபுரத்தை முழுக் கோபுரமாக்கினார். ஆடி வீதியில் கல் பாவித் தளம் அமைத்தார். கோயிலின் மேற்பகுதியில் தளவரிசை களைச் செப்பனிட்டார். திருக்கல்யாண மண்டபம் கட்டினார். திருமஞ் சனத்திற்குத் தங்கக் குடம் செய்து வைத்தார்.

குடநீராட்டு விழாச் சமயத்தில் நாகப்ப செட்டியாருக்குக் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. கொடுத்த இடத்தில் வசூலிக்க, வண்டிகட்டிக் கொண்டு, சமையல்காரனையும் வண்டிக்காரனையும் கூட்டிக் கொண்டு அடுத்த ஊருக்குப் புறப்பட்டார். வைகைக்கு அக்கறையில் உள்ள அந்த ஊரிலே, தேடிப் போனவர் இல்லை. அவர் வேறு ஊருக்குப் போனதையறிந்து அங்கே போனார் செட்டியார். ஆனால் அவர் வேறு பாதை மூலம் சொந்த ஊருக்குத் திரும்பி விட்டார். எனவே, செட்டி யார், இரவைக் கழிக்க அந்த ஊரிலேயே தங்க நேரிட்டது. வண்டியில் இருந்த மெத்தையை எடுத்துப் போட்டு, ஒரு வீட்டுத் திண்ணையில், நாகப்ப செட்டியார் படுத்துக்கொண்டார். வண்டிக்காரனும் சமையல் காரனும் அடுத்த திண்ணையில் படுத்தார்கள். செட்டியாருக்கு நல்ல பசி. ஆனால் மீனாட்சியம்மையின் மூக்குத்தித் தீபாராதனை பார்த்து, அதன் பிறகுதான், ஆலயப் பிரசாதத்தைச் சாப்பிடும் ப ழ க் க ம் உள்ளவர் செட்டியார். இப்பொழுது வெள்ளியூரில் தங்கும்படி நேரிட்டு விட்டது. ''ஊர் வந்து சேர்ந்தேன்; எந்தன் உளம் வந்து சேரக் காணேன்'' என்றபடி மனமெல்லாம் மதுரையிலிருக்க கண்ணை மூடிய படி படுத்திருந்தார் செட்டியார்.

மூடிய கண்களுக்குள் ஒளிவட்டம் விரிந்தது. கண்ணைத் திறந்தார் செட்டியார். அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி, சின்னஞ்சிறு பெண் போல. சிற்றாடை இடையுடுத்தி, கையில் தாம்பாளத்தோடு எதிரில்

நின்ருள். ஆயிர ஞாயிறு போலும் அருளொளி கண்களில் பாய, அம்மையைக் கண்ட நாகப்பையா ஆனந்தக் கண்ணீர் விட்டார். தாம்பாளத்தைச் செட்டியாருக்கு முன் வைத்த அன்னே, தன்னே மறைத்துக் கொண்டாள். தேம்பித் தேம்பிச் சிறு குழந்தை போல அழுதார் செட்டியார். அந்தத் தாம்பாளத்தில் அர்த்த சாமப் பிரசாதம் இருந்தது. வண்டிக்காரனுக்கும் சமையல்காரனுக்கும் அதைக் கொடுத்துத் தானும் சாப்பிட்ட செட்டியார் மறுநாள் விடிந்ததும் மதுரைக்கே திரும்பி ஓடி வந்தார். ஆலயத்தில் வெள்ளித் தாம்பாளத்தைக் காணவில்லை என்று பரிசாரகரைச் சந்தேகப்பட்ட நேரத்தில், கையில் வெள்ளித் தாம்பாளத்தோடு வந்தார் செட்டியார். பலரும் வினவப் பதில் சொல்லாமல் அன்னேயின் திருமுன் அழுதார் செட்டியார். தன்னம் தனி நின்றது தானறிய, இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ? அருள் நிகழ்ச்சிகளே யாருக்கு உணர்த்த முடியும்? ‘இனி மேல் மதுரையின் எல்லையைத் தாண்ட மாட்டேன்’ என்று உறுதி கொண்ட செட்டியார், அமராவதி புதூரில், தன் மனேவி இறந்தபோது கூட மதுரையைத் தாண்டவில்லே.

இத்தகைய பெருங்கொடைப் பக்தருக்கு இரவில் பிரசாதம் தந்த மதுரை மீனுட்சியின் திருவுருவம் சென்ற இதழ் அட்டையில் அருள் பொலியக் காட்சியளித்தது. அந்த அன்னேயின் திருவருள் நாட்டு மக்களுக்கு நன்மையைத் தரக் காத்திருக்கிறது. நம்பினுர் கெடுவதில்லே நான்குமறைத் தீர்ப்பு. முந்தி வந்து கும்பிட்டால் மூவுலகும் வென்றிடலாம்.

இது நியாயமா?

நாம் கட்டிய கோயில்களில் அரிசனங்கள் உள்பட யார் வேண்டுமானுலும் கருவறை வரைக்கும் போகலாம். நாமும் போகலாம். இது நல்ல வளர்ச்சி. ஆனுல் செட்டியார்களாகிய நாம் கட்டிய கல்லூரிகளில் அரிசனங்கள் போகக் கூடிய தூரம் வரை நாம் போக முடியாது. இது நியாயமா?

— வி. என். சிதம்பரம் செட்டியார்
(சேலம் நகரத்தார் சங்க ஆண்டு விழாவில்)

விளம்பரங்களும் அதன் வகைகளும்

எல். சுந்தரம், ஒக்கூர்.

'Advertisement', 'Publicity' என்ற ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழில் 'விளம்பரம்' என்று பொருள். இந்த விளம்பரம் நம் நாட்டில் பல வகைகளில் செய்யப்படுகிறது. தொலைக்காட்சி, வானொலி, திரைப் படம், பத்திரிகைகளின் வாயிலாக இவை செய்யப்படுகின்றன. இவை தவிர இரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், பஸ்களிலும் சுவரொட்டி கள், ஒலிபெருக்கிகளின் மூலமாகவும் மாநகராட்சிகள், நகராட்சிகளின் எல்லைகளுக்குள் சிமெண்டு போர்டுகளின் மூலமாகவும் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

விளம்பரத்தால் இலாபமே!

உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் தவிர விற்பனையாளர் களும் விளம்பரத்தால் பயனடைகிறார்கள். விளம்பரத்தால் பயன்பெறாத வர்கள் சிலர் உண்டென்றால் அவர்கள் தரக் குறைவான பொருட்களை உற்பத்தி செய்பவர்கள், விநியோகிப்பவர்கள், அல்லது விற்பனை செய் பவர்களாகத்தான் இருக்க முடியும். விளம்பரத்தால் பொதுவாக இலாபம்தான்.

ஏஜெண்டுகள்

விளம்பரப்படுத்துபவர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கு மிடையே பாலமாக இருந்து சிலர் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு விளம்பர ஆலோசகர்கள் அல்லது விளம்பர ஏஜெண்டுகள் என்று பெயர். இவர் களில் பெரும்பாலோர் அங்கீகரிக்கப்பட்டவர்கள். இவர்கள் விளம்பரப் படுத்துபவர்கள் கொடுக்கும் கமிஷனை நம்பிப் பணியாற்றுகிறார்கள். விளம்பரத்திற்கென்று ஆயிரக் கணக்கில் தொகையை ஒதுக்கி வைத்துச் செலவு செய்யும் பெரிய நிறுவனங்களுக்கு, முதலாளிகளுக்கு விளம்பரம் செய்ய ஏற்படும் டிசைனிங் சார்ஜ், பிளாக் செலவு மற்றும் இதர செலவுகளை இவர்களே ஏற்றுக் கொள்கிறார்கள்.

தொலைக் காட்சி விளம்பரம்

தொலைக் காட்சி, வானொலிகளில் எல்லோரும் விளம்பரம் செய்து விடமுடியாது. ஆயிரக் கணக்கில் செலவு செய்யத் தகுதி படைத்தவர் களே இவைகளை அணுக முடியும். மற்ற வகைகளின் மூலமாக நடுத்தர வணிகர்களிலிருந்து ஏழை மக்கள் வரை தகுதிக்கேற்ப விளம்பரம் செய்ய முடியும்.

இதர விளம்பரங்கள்

இரயில் நிலையங்கள், பஸ் நிலையங்களில் விளம்பரப் போர்டுகள் வைக்கப்படும் இடங்களுக்கேற்ப, கால அளவுகளுக்கேற்ப, விளம்பர வகைகளுக்கேற்ப கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. திரை அரங்கு களில் திரைப்படமாக வெளியிட்டு விளம்பரப்படுத்த படச் சுருளின்

நீளத்தைப் பொறுத்துக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சினிமா சிலேடுகளின் மூலமாக விளம்பரம் செய்ய 3 மாதங்கள், 6 மாதங்கள், ஒரு ஆண்டுக்கு இவ்வளவு என்று பணம் வசூலிக்கிருர்கள்.

மாநகராட்சி, நகராட்சி எல்லைக்குள் அவைகளுக்குச் சொந்தமாக உள்ள சிமெண்டு போர்டுகளை கால அளவில் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு விளம்பரம் செய்கிருர்கள்.

சினிமாப் பட போஸ்டர்களை திரை அரங்குகளுக்காக பட வெளி யீட்டு நிறுவனங்கள் 'பில் போஸ்டிங்' கம்பெனிகள் மூலமாக ஒட்டச் செய்து ஒரு குறிப்பிட்ட சதவிகிதத் தொகையை திரை அரங்குகளிட மிருந்து வசூலித்துக் கொள்கின்றன. போஸ்டர்களுக்கான வரியைச் செலுத்தாமல் விளம்பரம் செய்பவர்களின் விளம்பரங்கள் தார் கொண்டு அழிக்கப்படுவதையும் அவ்வப்போது காணலாம்.

பத்திரிகை விளம்பரம்

பத்திரிகைகளில் விளம்பரம் செய்வது ஒரு முறை. அது சுலபமா னதும்கூட. பத்திரிகை அலுவலகங்களுக்கு நேரில் போக முடியாத வர்கள் தங்கள் இடத்தில் இருந்து கொண்டே பத்திரிகை விளம்பரத்திற் கென உள்ள விளம்பர ஏஜெண்டுகளை அழைத்து விஷயத்தைக் கூறி விட்டால் போதும். எல்லாவற்றையும் அவர்களே கவனித்துக் கொள் வார்கள். பணம் மட்டும்தான் நாம் கொடுக்க வேண்டும். அடிக்கடி விளம்பரம் கொடுப்பவர்களுக்கு கட்டணமும் குறையும்; விளம்பர ஏஜெண்டுகள் மூலம் விளம்பரம் செய்தால் தொகையைக் கொஞ்சம் தாமதமாகவும் கொடுக்கலாம்.

பத்திரிகைகளின் வகைகள்

பத்திரிகைகளில் பல வகைகள் உண்டு. மாத இதழ், மாதம் இரு முறை இதழ், வார இதழ், தினசரி இதழ் என்று பழ மொழிகளில் வெளிவருகின்றன. இவை பொங்கல், தீபாவளி, கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் விழாக் காலங்களில் சிறப்பு மலர்கள் வெளியிடுகின் றன. பத்திரிகைகள் தவிர கோயில்கள், வணிக நிறுவனங்கள், தனிப் பட்டவர்கள் நினைவு மலர் (Souvenir) வெளியிடுவார்கள்.

விளம்பரக் கட்டணம்

புத்தக வடிவில் வெளிவரும் பத்திரிகைகளில் வெளி அட்டை விளம் பரத்திற்கான கட்டணம் ஒரு தடவைக்கு ரூ. 500 என்ருல் உள் அட்டைக் கட்டணம் அதைவிடக் குறைவாக இருக்கும். உள் பக்கங் களில் ஒரு முழுப்பக்கத்திற்கு, உள் அட்டைக் கட்டணத்தைவிட இன்னும் குறைவாகவே இருக்கும். பொதுவாக புத்தக வடிவில் வரும் பத்திரிகைகளில் முழுப்பக்கம், அரைப்பக்கம், கால்ப்பக்கம் என்றுதான் கட்டணத்தை நிர்ணயிப்பார்கள்.

தினசரிப் பத்திரிகைகளில் ஒரு சென்டிமீட்டர் ஒரு பத்திக்கு ரூபாய் இவ்வளவு என்று கட்டணம் வசூலிப்பார்கள். அதாவது ஒரு சென்டி மீட்டர் உயரம் ஒரு பத்தி அகலத்திற்கு (ஒரு பத்தி என்பது சுமாராக 5 செ. மீ. அகலம் இருக்கும்) இவ்வளவு என்று வசூலிப்பார்கள். உதாரணமாக 1 செ. மீ. 1 பத்திக்கு ரூ. 5 என்ருல் 10 செ. மீ. உயரம் 2 பத்தி அகலமுள்ள விளம்பரத்திற்கு $5 \times 20 = 100$ ரூபாய் ஆகும்.

பத்திரிகை நிறுவனங்கள் அவ்வப்போது விளம்பர அட்டவணையின் மூலம் தங்கள் விளம்பர விகிதங்களைத் தெரிவிக்கின்றன. சில பத்திரி கைகள் ஒன்றுக்கு மேற்பட்ட நகரங்களில் தங்கள் பத்திரிகைகளை அச்சிட்டு வெளியிடுகின்றன. அவை தங்களின் விற்பனைக் கேற்ப நகரங்களுக்கேற்ப தனித்தனியாகவும் மொத்தமாகவும் விளம்பர விகிதங்களை அமைத்துக் கொள்கின்றன. எல்லாப் பதிப்புகளிலும் வெளியிடும் விளம்பரத்திற்கு Group Advertisement என்று பெயர்.

வரி விளம்பரம்

திருமண அமைப்பு, வீடு, நிலம், இயந்திர விற்பனைகள், கல்வி, வேலை வாய்ப்பு, லாட்டரி போன்றவைகளுக்காகக் குறைந்த கட்டணங் களில் வரி விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. இவைகளுக்கு வரி ஒன்றுக்கு ரூபாய் இவ்வளவு என்று வசூலிக்கிருர்கள்.

காது விளம்பரம்

தினசரிப் பத்திரிகையின் பெயர்த் தலைப்புக்கு இருபுறமும் வரும் விளம்பரத்திற்கு 'Ear panel' விளம்பரம் என்பார்கள். Ear என்ருல் காது - panel என்ருல் வெற்றிடம். அதாவது தலைப்புக்கு இருபுறமும் காது போன்ற வெற்றிடத்தில் வெளிவருவதால் அதற்கு இந்தப் பெயர்.

சிலர் தங்களது விளம்பரம், இத்தனுவது பக்கத்தில் இன்ன இடத் தில்தான் வரவேண்டுமென்று பிடிவாதம் செய்வார்கள். அந்தப் பிடிவாதத்திற்கு அபராதம் போல - 25 சதவிகிதம் கூடுதலாகக் கட்ட ணம் பெற்றுக் கொண்டு அவர்களது விருப்பத்தை நிறைவேற்றும் முறையும் பத்திரிகை அலுவலகங்களில் உண்டு. சிலர் தங்களது விளம்பரம் முதல் பக்கத்தில் அதுவும் தனியாக (வேறு விளம்பரங்கள் எதுவும் இல்லாமல்) வெளிவரவேண்டுமென்பார்கள். அதற்கும் சரி என்று அபராதம் போல- வழக்கமான கட்டணத்துடன் 100 சதவிகிதம் கூடுதல் தொகை வசூலித்துக் கொண்டு வெளியிடுவார்கள்.

விற்பனையும் அவநம்பிக்கையும்

பத்திரிகைகளுக்காக விளம்பரம் சேகரிப்பவர்கள் கொஞ்சம் பொய் சொல்வது வழக்கம். அதாவது ஒரு குறிப்பிட்ட பத்திரிகை 15 ஆயிரம் பிரதிகள் விற்பனையாவதாக வைத்துக் கொள்வோம். அது தொடர் புடையவர்கள் தங்கள் பத்திரிகை 25 ஆயிரம் பிரதிகள் விற்பதாகக்

கூறுவார். இதை நம்பினுல்தான் போச்சு. இல்லையேல் ... நம்ப மறுப்பவர்களுக்கென்று இயங்குகிறது ஒரு தனியார் நிறுவனம் — பம்பாயில்! பத்திரிகை நிறுவனங்களை தனது உறுப்பினர்களாக ஆக்கிக் கொண்டு (உறுப்பினர் ஆவது கட்டாயமல்ல) அவர்களது விற்பனைக் கணக்குகளை ஆய்வு செய்து 6 மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வுச் சான்றிதழ் வழங்குகிறது. அந்த நிறுவனம் வெளியிடும் ஆய்வுச் சான்றிதழ் புத்தகத்தில், எந்தப் பத்திரிகை எந்த மாதத்தில் எத்தனை பிரதிகளை விற்பனை செய்திருக்கிறது என்று கண்டுகொள்ளலாம். அதுமட்டுமல்ல மாவட்ட ரீதியாகவும் விற்பனை விவரங்களை அறிந்துகொள்ளலாம். உறுப்பினரல்லாத பத்திரிகைகளின் விற்பனை விவரங்களை நாம் நம்பித் தான் ஆகவேண்டும்.

விளம்பரத்தில் புதுமை

விளம்பரங்களில் புதுமையைக் கையாள்வோரும் உண்டு. சிலர் தமிழ்ப் பத்திரிகைகளில் ஆங்கிலத்திலும், ஆங்கிலப் பத்திரிகைகளில் தமிழிலும் விளம்பரம் செய்வார்கள். இன்னும் சிலர் பறக்கும் பலூனில் விளம்பரம் செய்வார்கள். ஆகவே நீங்களும் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்.

எது காரணமோ?

படிப்பிலே மிகக் குறைந்தவர்கள் உள்ள சமூகங்கள் பிற்படுத்தப்பட்ட சமூகங்களாகக் கருதப்பட்டன. பணக்காரத் தன்மைக்கும் பிற்படுத்தப்பட்ட தன்மைக்கும் தொடர்பு இல்லை. முன்பு நகரத்தார்களில் பலர் படித்தவர்களாக இருந்ததாலோ அல்லது 'நலம் சமூகத்தைப் பிற்படுத்தப்பட்டவர் சமூகமாக ஆக்கக் கூடாது' என்று சில நகரத்தார்கள் நினைத்ததாலோ நகரத்தார்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

— க. இராஜாராம்
தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர்
(சேலம் நகரத்தார் சங்க ஆண்டு விழாவில்)



இதய மலர் தூவுங்கள்

சு. கதி. குழ. கதிரேசன், B. A.,
இராயவரம்.

பிள்ளையைப் பெத்தவன் சிரிக்கிறான்
பெண்களைப் பெத்தவன் முழிக்கிறான் !
இன்னும் இந்த நாட்டிலே
இரண்டும் ஒன்று ஆகலே !

அம்மா பிள்ளையைப் பெத்ததுக்கு
ஆளாக்கி விட்டதுக்கு
ஆனை குதிரை கேட்கலே
ஆருயிரந்தான் கேட்கிறாள் !

அப்பா படிக்க வச்சதுக்கு
அசலு வட்டி கேட்கிறார் !
இப்பொழுதே தந்தால்தான்
ஏறும் தாலி என்கிறார் !

மாப்பிள்ளை மக்காளுலும்
'மவுசு' இன்னும் குறையலே!
செல்லாக் காசு மாப்பிள்ளைக்குச்
சீர்வரிசை முடையில்லே!

பெண்ணைக் கொடுத்ததல்லாமல்
பெரும் பொருளும் கொடுக்கிறார்!
அள்ளிக் கொடுத்த பின்னாலும்
அதிகம் ஆசைப் படுகிறார்!

பின்முறைகள் வேண்டுமென்று
பிறந்த வீட்டுக் கனுப்புறார்!
கண்ணுக் கழகாய்ப் பெண்ணிருந்தும்
காசில் தானே மிதக்கிறார்!

என்ன கொடுமை இந்த நாட்டில்
எதிர்த்து நிற்க ஆளில்லே!
எல்லாம் பணம் என்பதாலே
எழுந்து நிற்க வலுவில்லே!

பெண்களுக்குப் புன்னகையே
பொன்னகையாம் பாருங்கள்!
பெண்ணடிமை இந்த நாட்டில்
புதையவழி காணுங்கள்!

மேட்டிலுள்ளோர் பள்ளம் நோக்கி
வேகமாக வாருங்கள்!
ஏற்றத் தாழ்வு எங்கும் நீங்க
இனியவழி காணுங்கள்!

பெண்ணெடுத்துப் பெண்கொடுத்துப்
பெருமைதனைச் சேருங்கள்!
உள்ளம் ஒன்று ஆகிவிட்டால்
உறவு கொண்டாடுங்கள்!

மாமியாரும் மாமனும்
மனம் திருந்தப் பாருங்கள்!
மருமகனை மறுமகளாய்
மதித்து இன்பம் காணுங்கள்!

ஆணும் பெண்ணும் பெற்றவர்க்கு
அடிமையில்லை காணுங்கள்
பேரம்பேச விலைப் பொருளா?
வெட்கமில்லை? கூறுங்கள்!

ஏழைபணக் காரர் பேதம்
ஏது இதில் கூறுங்கள்
இன்பவாழ்வு துவங்குவோர்க்கு
இதயமலர் தூவுங்கள்.

வரதட்சணைக்கு விலங்கிட்டு
வழியனுப்பப் பாருங்கள்!
வரலாற்றிலிதை எழுதி வைத்து
வாழ்த்துப்பாப் பாடுங்கள்!

பட்டம் இனிஷியலாயிற்று!

அந்தக் காலத்தில் செட்டியார்களில் அதிகம் படித்தவர்கள் இல்லை. ஒருவர் முதன் முதலில் பி. காம். பட்டம் பெற்றார். அவரை பி. காம். வீரப்ப செட்டியார் என்று அழைத்தார்கள். ஆனால் இப்பொழுது எத்தனையோ பி. காம்.கள் உள்ளன!

— வி. என். சிதம்பரம் செட்டியார்

(சேலம் நகரத்தார் சங்க ஆண்டு விழாவில்)



கல்கத்தா நகரத்தார் சங்கம்

கல்கத்தா நகரத்தார் சங்கத்தின் மூன்ருவது பேரவைக் கூட்டம் 20-2-82 அன்று நடைபெற்றது.

தலைவர் திரு. மா. கருப்பையா வரவேற்றுப் பேசினர். தேவ கோட்டை திரு. மெய்யப்ப செட்டியார் வாழ்த்திப் பேசினர். செயலாளர் திரு. காசு. மணியன் பேசும்போது சங்கத்தின் வளர்ச்சி, உறுப்பினர்கள் தரும் உற்சாகத்திலும் ஊக்கத்திலும் தான் இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் நாலாம் ஆண்டிற்கான நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. ஏ. என். நாராயணன் செட்டியார் - தலைவர். திரு. எஸ். கருப்பன் செட்டியார் - துணைத் தலைவர். திரு. என். இராமநாதன் - செயலாளர். திரு. எஸ். கே. கணேசன் - இணைச் செயலாளர். திரு. எஸ். எம். சிங்காரம் - பொருளாளர். மற்றும் திருவாளர்கள் டி. ஆர். இராமநாதன், ஏ. ஆர். சிங்காரம், வி. ஆர். நடராஜன், கே. ஆர். இராமநாதன், வி. சுப்பிரமணியன், எஸ். நாச்சியப்பன், பி. செந்தில் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

ஃ ஃ ஃ

ஹைதராபாத், செகந்தராபாத் சங்கம்

ஹைதராபாத், செகந்திராபாத் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகக் கலாசார சங்கத்தின் மூன்றும் ஆண்டு நிறைவு விழா 10-1-82 அன்று நடைபெற்றது. அவ்வமயம் செயலாளர் திரு. விஸ்வநாதன் ஆண்டறிக்கையை வாசிக்க திரு. அருணசலம் வரவு செலவுக் கணக்கை வாசித்தார்.

கூட்டத்தில் திரு. பழ. இலக்குமணச் செட்டியார் தலைவராகவும் திரு. மு. சோமசுந்தரம் துணைத் தலைவராகவும், திரு. அழ. வெங்கடாசலம் செயலாளராகவும் திரு. அ. சொ. நமச்சிவாயம் துணைச் செயலாளராகவும் மற்றும் ஆறு செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். திரு. வெங்கடாசலம் நன்றி கூறினர்.

சேலம் நகரத்தார் சங்க ஆண்டு விழா

சேலம் நகரத்தார் சங்கத்தின் 16ஆவது ஆண்டு நிறைவு விழா 21-3-82 அன்று சேலம் நேஷனல் ஹோட்டல் தந்தூரி மகாலில் சங்கத் தலைவர் திரு. எம். எஸ். உடையப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் அறங் காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இவ்விழாவில் திரு. வி. என். சிடி. அவர்களுக்கு திரு. எம். எஸ். சொக்கலிங்கம் செட்டியார் அவர்களும் டாக்டர் தமிழண்ணல் அவர் களுக்கு திரு. பிஎல். அண்ணாமலை செட்டியார் அவர்களும் பொன்னாடை அணிவித்தார்கள். பள்ளத்தூர் சுப. அருணாசலம் செட்டியார் அவர்கள் வாழ்த்துரைக்குப் பிறகு டாக்டர் தமிழண்ணல் தலைமையில் பட்டி மன்றம் நிகழ்ந்தது. 'நகரத்தார்களிடம் மிகவும் சிறப்பாகக் காணப் பெறுவது சைவப் பற்றே' என்று ஒரு சாராரும் 'தமிழ்ப்பற்றே' என்று ஒரு சாராரும் வாதிட்டனர். சைவப்பற்றே சிறப்பாகக் காணப்பட்ட தென நடுவர் தீர்ப்புக் கூறினார்.

இக் கூட்டத்தில் புதிய ஆண்டுக்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். திரு. எம். எஸ். உடையப்ப செட்டியார் தலைவராகவும் திரு. எம். எஸ். சொக்கலிங்கம் செட்டியார், திரு. பிஎல். அண்ணாமலை இருவரும் துணைத் தலைவர்களாகவும், திரு. ஆர் எம். பழனியப்பன், திரு. சி டி. ஏகப்பன் இருவரும் செயலாளர்களாகவும், திரு. டி. சிதம் பரம் பொருளாளராகவும், திரு. சித. அண்ணாமலை, திரு. ஆர். இராம நாதன் ஆகிய இருவரும் ஆடிட்டர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக, நகரத்தார்களின்பால் பேரன்பு கொண்ட, தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியது குறிப்பிடத் தக்கது. பெருந் திரளான நகரத்தார்களும், ஆச்சிமார்களும் கலந்துகொண்டு, விழாவைச் சிறப்பித்தார்கள்.

ஃ ஃ ஃ

புதுடில்லி நகரத்தார் சங்கம்

புதுடில்லி நகரத்தார் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் 28-2-82 அன்று கரோல்பாக் ஆர்ய சமாஜ் கலை அரங்கில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரியின் முதல்வர் திரு. என். சீனிவாசன் சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் அனைவருக்கும் கல்வி இன்றியமையாதது என்றும் செல்வத்தில் சிறந்து விளங்குபவர்கள் உயர் கல்வியையும் பெறுவார்க ளானால் அது சிறந்த மேன்மைகளை உண்டாக்கும் என்றும் திருவும் கல்வியும் சேர வாழும் வாழ்வே ஆன்றோர் மதிக்கும் புகழ் வாழ்வாகும் என்றும் கூறினார்.

கூட்டத் தொடக்கத்தில் சங்கத்தலைவர் திரு. எம்.எஸ்பி. சண்முகம் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். அப்போது அவர் திரைகடலோடித் திரவியம் தேடிப் புகழ்பெற்ற நகரத்தார்கள் சொந்த நாட்டில் தலைநகர் போன்ற இடங்களில் அரசுப் பதவிகளில் அதிகமாக வரவில்லை என்றும், கலைஞர்களையும், இசைவாணர்களையும் பெரிதும் ஆதரித்து வரும் இச்சமூகத்தில் கலைஞர்களும் இசைவாணர்களும் அதிகமாக இல்லாதிருக்கின்றனர் என்றும் ஆகவே அத்துறைகளிலும் இவர்கள் ஆர்வம் காட்டவேண்டுமென்றும் கூறினர்.

இக்கூட்டத்தில் அகில இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் மருத்துவப் பேராசிரியராகப் பணிபுரியும் டாக்டர் அன்புச் செட்டி அவர்களின் புதல்விகள் குமாரி மாலதியின் இசை அரங்கேற்றமும், குமாரி சாந்தியின் வீணை அரங்கேற்றமும் நடந்தது.

குழந்தைகளின் இசைக் கலைத் திறமையை திருமதி வசந்தா ராமசாமி பாராட்டிப் பேசினர்.

இசை நிகழ்ச்சிக்குப் பின்னர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி டில்லி பிராந்தியக் கிளைத் தலைமை அலுவலர் திரு. A. சோலையன் அவர்கள் தலைமையில் சங்கத்தின் பேரவைக் கூட்டம் ஒன்றும் நடந்தது. முந்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த சங்க சட்ட திட்டங்களை திரு. தனலெட்சுமி நாராயணன் படித்துக் காட்டிப் பேரவை அங்கத்தினர்களின் ஒப்புதலைப் பெற்ருர். சங்கச் செயலாளர் திரு. பி. ஆர். சிதம்பரம் நன்றிகூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

காலமானர்

மேலைச் சிவபுரி திரு. ஏ. நாகப்ப செட்டியார் இயற்கை யெய்தினர் என்ற செய்தி எல்லோரையும் வருந்தச் செய்திருக்கிறது. மிக எளிய குடும்பத்தில் பிறந்த இவர், சிறந்த அறிஞர்; உழைப்பே உயிர் மூச்சு எனக் கொண்டவர். இலட்சிய வீரர். பொதுமக்களின் நலனுக்காக முதலில் பஸ் சர்வீஸ் நடத்தினர். பின்னர் தோல் தொழிலைத் தொடங்கி செட்டி நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்துப் பெருமை பெற்ருர். 'இந்தியா லெதர் கார்ப்பரேஷன்' மூலம் தோல் ஏற்றுமதி வணிகத்தில் சிறப்புப் பெற்ற இவர், மத்திய அரசின் 'பத்மஸ்ரீ' விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பெருந் தொழிலதிபரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்கிருேம்.

தேவகோட்டை நகரசபையின் முன்னுள் தலைவரும் நகரத்தார் நலனில் அக்கறை கொண்டவருமான திரு. இராம. வெள்ளையன் அவர்கள் சென்னையில் காலமானர் என்பதை அறிய வருந்துகிருேம். சமுதாயத் தொண்டரான அவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிருேம்.

மதுரை-625009, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு, டோர் நிர். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, டோர் நிர். 25லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.